# தமிழகத்தில் வழங்கப்படும் விருதுகள்

**ஒவ்வொருவரும் ஒவ்வொரு விஷயத்தில் மிகவும் திறமையானவர்கள் தான். அப்படிப்பட்டவர்களை மேலும் ஊக்குவிக்க அவர்களின் திறமைகளின் அடிப்படையில் விருது வழங்கி தமிழக அரசு கவுரவப்படுத்தி வருகிறது.**

**இந்த விருதுகள் திறமைகளை ஊக்குவிப்பதோடு, மேலும் அடுத்த நிலைக்கு அவர்களை கொண்டு செல்கிறது.**

**இப்படி விருதுகள் ஒவ்வொரு துறைக்கும் ஏற்ப பல்வேறு பெயர்களில் வழங்கப்படுகிறது. அதிலும் குறிப்பாக நமது நாட்டின் முக்கிய தலைவர்கள் பெயர்களில் சில விருதுகள் வழங்கப்பட்டு கவுரவிக்கப்படுகின்றன.**

**அப்படிப்பட்ட விருதுகள் என்னென்ன..? அவற்றின் சிறப்புகள் என்ன? போன்றவை உள்ளிட்ட அனைத்து தகவல்களும் இந்த PDFல்... வாங்க அறிந்து கொள்ளலாம்.**

## அப்துல் கலாம் விருது

மறைந்த முன்னாள் குடியரசு தலைவரான ஏ.பி.ஜே. அப்துல் கலாம் ஐயா அவர்களின் நினைவைப் போற்றும் விதமாக 'டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் விருது' ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தன்று வழங்கப்படுகிறது.

இந்த விருது, விஞ்ஞான வளர்ச்சி, மனிதவியல் மற்றும் மாணவர்களின் நலன் ஆகியவற்றிற்கு பாடுபட்டு வரும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கு வழங்கப்படும்.

**அப்துல் கலாம் விருது பெறுவோர்களுக்கு** 8 கிராம் தங்கத்தால் ஆன பதக்கம் மற்றும் 5 லட்சம் ரூபாய் ரொக்கம், பாராட்டுச் சான்றிதழ் ஆகியவை வழங்கப்படும். இந்த விருது 2015 முதல் வழங்கப்படுகிறது.

### விருது பெற்றவர்கள்

- 2015 - ந.வளர்மதி (இஸ்ரோ திட்ட இயக்குனர்) - **இவர் முதல் அப்துல் கலாம் விருது பெற்ற பெண் விஞ்ஞானி ஆவார். அரியலூர் மாவட்டத்தை சேர்ந்தவர்.**
- 2016 - டாக்டர் சண்முகம் (சென்னை மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவன முதன்மை விஞ்ஞானி)
- 2017 - எஸ்.பி.தியாகராஜன் (ஒரு சிறந்த விஞ்ஞானி - சென்னை பல்கலைக்கழக முன்னாள் துணை அதிபர்)
- 2018 - தக்ஷா குழு (ஆளில்லா விமானம் குறித்த ஆய்வுகள்)

- 2019 - கே.சிவன் (இஸ்ரோ தலைவர்) - கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்தவர்.
- 2020 - ச.ஆனந்தம் செல்வகுமார் (ஆனந்தம் இளைஞர் அறக்கட்டளை) - இவர் அறக்கட்டளையின் மூலம் ஏழை மாணவர்களுக்கு இலவச கல்வி வழங்கி வருகிறார். இவர் சென்னையை சேர்ந்தவர்.

## கல்பனா சாவ்லா விருது

**தமிழ்நாடு அரசால் அளிக்கும் விருதுகளில் ஒன்று கல்பனா சாவ்லா விருது.**

**இந்தியாவில் பிறந்து அமெரிக்க குடியுரிமை பெற்ற விண்வெளி வீரங்கனை கல்பனா சாவ்லாவின் நினைவாக தமிழ்நாட்டை பூர்வீகமாக கொண்ட வீர, தீர, சாகசச் செயல் புரியும் இளம் பெண்களுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.**

**ஒவ்வொரு ஆண்டும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சுதந்திர தின விழாவின்போது இந்த விருது வழங்கப்படுகிறது.**

**இந்த விருதாளர்களுக்கு ரூ.5 லட்சத்திற்கான காசோலையும், பாராட்டு சான்றிதழும், ஒரு பதக்கமும் வழங்கப்படுகிறது.**

### விருது பெற்றவர்கள்

- 2003 - ரேஷ்மா சர்மா, கராத்தே வீராங்கனை.
- 2004 - அமலமேரி, கன்னியாகுமரி (ரயில் விபத்தை தடுத்தவர்).
- 2005 - மீரா, சுல்தான்பேட்டை, கோவை (சுனாமியின் போது பலரை காப்பாற்றியவர்).
- 2006 - வசந்தா கந்தசாமி, சென்னை (ஐ.ஐ.டி கணித பேராசிரியை)
- 2007 - நிர்மலா பால்சாமி
- 2008 - பி.ஜோதி நிர்மலா ஐ.ஏ.எஸ். (பத்மநாபபுரம் ஆர்.டி.ஓ வாக இருந்தபோது மணல் கொள்ளையை தடுத்தவர்).
- 2009 - டாக்டர் ராஜ மகேஷ்வரி (சென்னை மருத்துவர்), ராஜலட்சுமி (மதுரை தடகள வீராங்கனை), புஷ்பாஞ்சலி (உறுப்புதானம் அளித்த ஹிதேந்திரன் தாயார், திருக்கழுக்குன்றம்)
- 2010 - ஜெ.தீபா, மதுரை (மாற்றுத் திறனாளி, குண்டு எறிதல் வீராங்கனை)
- 2011 - எஸ். சங்கீதா (துணிச்சலான வருவாய்த்துறை வட்டார அலுவலர், திருச்சி) - இவர் **சட்டசபைத் தேர்தலின்போது ஆம்னி பஸ்சில் கொண்டு**

**செல்லப்பட்ட, கோடிக்கணக்கான பணத்தை தனிநபராக விரட்டிச் சென்று பறிமுதல் செய்தவர் ஆவார்.**

– 2012 - ராஜலட்சுமி, அவரின் மகள் சிவரஞ்சனி. (திருடனை பிடித்தவர்கள், கடலூர் மாவட்டம்)
– 2013 - சுகி பிரமிளா, வட்டாட்சியர், நாகர்கோவில் (உணவுப் பொருட்கள் கடத்தலை தடுத்தவர்)
– 2014 - ஆர். பொன்னி, துணிச்சலான காவல் துறை அதிகாரி
– 2015 - ஜோதிமணி, ஈரோடு, பார ஊர்தி ஓட்டுநர். 2016 - ஜெயந்தி, மயான பணியாளர், நாமக்கல் மாவட்டம்.
– 2017 - செல்வி. பிரீத்தி, (மாற்றுத் திறனாளி, திருவண்ணாமலையில் தொண்டு நிறுவனம் நடத்தி வருபவர்)
– 2018 - முத்துமாரி (கட்டையால் சிறுத்தையை விரட்டிய கோவை மாவட்டம் வால்பாறை, பெரியகல்லார் கிராமத்தை சேர்ந்தவர்).
– 2019 - திருமதி பி.ரம்யாலட்சுமி, **தமிழக மீன்வளத்துறை பெண் அதிகாரி.**
– 2020 - **செந்தமிழ்ச்செல்வி, முத்தம்மாள், ஆனந்தவல்லி - பெரம்பலூர் மாவட்டம், (நீரில் மூழ்கி உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த இளைஞர்களை காப்பாற்றிய வீர மங்கைகள்)**

## இராசராசன் விருது

மாமன்னன் இராசராசன் படைப்பிலக்கியப் பெரும் பரிசு எனவும் இராசராசன் விருது குறிப்பிடப்படுகிறது.

தமிழக அரசும், தஞ்சை தமிழ்ப்பல்கலைக் கழகமும் இணைந்து வழங்கும் விருது தான் இராசராசன் விருது. இவ்விருது 1984ம் ஆண்டு நிறுவப்பட்டது.

### விருது பெற்றவர்கள்

– 1984 - கவியோகி சுத்தானந்த பாரதியார் (பாரதசக்தி மகாகாவியம் என்ற நூலுக்காக முதல் இராசராசன் விருதைப் பெற்றார்).
– 1995 - சுரதா - தேன்மழை நூலுக்காக இராசராசன் விருதைப் பெற்றார்.
– 1995 - மு.கருணாநிதி - தென்பாண்டி சிங்கம் நூலுக்காக இராசராசன் விருதைப் பெற்றார்.

# ஔவையார் விருது

தமிழ்நாடு அரசின் விருதுகளில் ஒன்று ஔவையார் விருது. இந்த விருது 2012ம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

சமூகச் சீர்திருத்தம், மகளிர் மேம்பாடு, மத நல்லிணக்கம், மொழித் தொண்டு, கலை, அறிவியல், பண்பாடு, கலாச்சாரம், பத்திரிகை, நிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தொண்டாற்றும் பெண்களை ஊக்குவிக்கும் வகையில் சிறப்புடன் பணியாற்றும் பெண்களில் ஒருவருக்கு உலக மகளிர் தினத்தன்று இந்த விருது வழங்கப்படுகிறது.

இந்த விருதுக்கு ஒரு லட்சம் ரூபாய் பரிசுத் தொகையும், எட்டு கிராம் அளவிலான தங்கப்பதக்கமும், தகுதிச் சான்றும் அளிக்கப்படுகிறது.

### விருது பெற்றவர்கள்

- 2012- திருமதி. ஒய். ஜி. பார்த்தசாரதி (சிறந்த பெண்மணி)
- 2013 - மரு.வி.சாந்தா (புற்று நோய் மருத்துவத் துறையில் சிறந்த சேவையாற்றிய சென்னை அடையாறில் உள்ள புற்று நோய் நிறுவனத்தின் தலைவர்)
- 2014 - மரு.கே.மாதங்கி - (காஞ்சி காமகோடி சைல்ட்ஸ் டிரஸ்ட், மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர்).
- 2015 - சாந்தி ரங்கநாதன் - (சமூக செயற்பாட்டாளர் குடிப்பழக்கத்திற்கு அடிமையானோரை மீட்கும் மருத்துவமனையை இந்தியாவிலேயே முதன்முதலில் சென்னையில் தொடங்கியவர்).
- 2016 - எம்.சாரதா மேனன் - (இந்தியாவின் முதல் பெண் மனநல மருத்துவர் மற்றும் ஸ்கார்ப் என்னும் தொண்டு நிறுவனத்தை தொடங்கிய பெண்மணி)
- 2017 - பத்மா வெங்கட்ராமன் - (சென்னை, அகில இந்திய மாதர் சங்கத்தின் தலைவர்)
- 2018 - சின்னப்பிள்ளை, மதுரை மாவட்டம் - (தன் கிராமத்திலும், சுற்றுப்புற கிராமங்களிலும் மகளிர் சுய உதவிக் குழுக்களை அமைத்து, மகளிர் பொருளாதார முன்னேற்றத்திற்குக் காரணமாக விளங்கியவர்).
- 2020 - கண்ணகி, திருவண்ணாமலை மாவட்டம். (பல்வேறு சமூகப்பணிகளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர்).